செ.வெ.எண்.48 நாள்.20.12.2017

திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் முதன்மை செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர் திரு.கே.சத்தியகோபால்,இ.ஆ.ப., அவர்கள் டெங்கு கொசு ஒழிப்பு தொடர்பாக பல்வேறு இடங்களுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். மேலும், வேளாண்மை தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு புதிய தொழில் நுட்பங்கள் குறித்து பயிற்சி அளித்தார்.

--------

திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் முதன்மை செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர் திரு.கே.சத்தியகோபால்,இ.ஆ.ப., அவர்கள் டெங்கு கொசு ஒழிப்பு தொடர்பாக பல்வேறு இடங்களுக்கு இன்று (20.12.2017) நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். மேலும், வேளாண்மை தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு புதிய தொழில் நுட்பங்கள் குறித்து பயிற்சி அளித்தார். இந்நிகழ்ச்சிகளின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்.

திருநெல்வேலி வண்ணார்பேட்டை நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தினை அதிகாலையில் பார்வையிட்டார். அங்கு செவிலியர்கள் மற்றும் மருத்துவர்களிடம் இப்பகுதியில் காய்ச்சல் பாதிப்பு குறித்து ஆய்வு செய்தார். பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டுமென உத்தரவிட்டார். தொடர்ந்து, வண்ணார்பேட்டை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள தண்ணீர் தொட்டி, கழிப்பறை பகுதி, சின்டெக்ஸ் டேங்க் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கொசு புழுக்கள் உள்ளதா என்பதையும், பள்ளி வளாக பகுதி தூய்மையாக பராமரிக்கப்படுகிறதா என்பது குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, வண்ணார்பேட்டை மெயின்ரோடு பகுதியில் சாலையோரங்களில் வாட்டர் கப், தேங்காய் மட்டை உள்ளிட்டவைகளில் கொசு புழுக்கள் உள்ளதா என்பதையும் ஆய்வு மேற்கொண்டார். மாநகராட்சி அலுவலர்களிடம் இப்பகுதியினை உடனடியாக சுத்தம் செய்ய உத்தரவிட்டார். அதனையடுத்து, திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாக பகுதியில் புதிதாக கட்டடங்கள் கட்டப்பட்டு வரும் பகுதி மற்றும் பல்வேறு பகுதிகளில் டெங்கு கொசு புழு உள்ளதா என்பதையும், தூய்மை பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்படுகிறதா என்பது குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். அங்குள்ள செவிலியர் பயிற்சி கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பயிலும் செவிலியர்களிடம் டெங்கு நோய் விழிப்புணர்வு, கொசு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வுகள் குறித்து பல்வேறு விளக்கங்களை தெரிவித்து, பயிற்சி அளித்தார். மேலும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பல்வேறு செவிலியர் பயிற்சி கல்லூரி மாணவ, மாணவிகளையும் ஒருங்கிணைத்து கொசு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகளில் ஈடுபடுத்திடவும், விழிப்புணர்வு தொடர்பாக பல்வேறு போட்டிகளை நடத்திடவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பராமரிப்புத்துறை, பட்டு வளர்ச்சித் துறை ஆகிய துறை அலுவலர்களுக்கு ஒருங்கிணைந்த பூச்சியியல் நோய் தடுப்பு தொடர்பான புதிய தொழில்நுட்ப யுக்திகள் குறித்து விரிவாக பயிற்சி அளித்தார்.

இந்நிகழ்வின் போது, சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.க.இளம்பகவத்,இ.ஆ.ப., கோட்டாட்சித் தலைவர்கள் (திருநெல்வேலி) திருமதி.மைதிலி, (தென்காசி) திரு.ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு.பெருமாள், கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் மரு.ராஜேந்திரன், தோட்டக்கலை துறை துணை இயக்குநர் திரு.அற்புதம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.